# இஸ்ரவேல் வரலாறு பாடம் - 1

இஸ்ரவேல் வரலாறு என்ற இந்த பாடத்தின் மூலமாக இஸ்ரவேலருடைய வரலாறு பற்றிய காரியங்களை நாம் கற்றுக்கொள்ள இருக்கின்றோம். இஸ்ரவேலருடைய வரலாறு மிகப்பெரிய வரலாறு. நாம் இஸ்ரவேலருடைய வரலாற்றை கற்றுக்கொள்வதினால், இஸ்ரவேல் வரலாற்றிலே நடைபெற்ற நிகழ்வுகளை கற்றுக்கொள்வதினால் வேதாகமத்தை நன்கு புரிந்துகொள்கிற நிலைக்கு கடந்துவரும்படி ஆசீர்வதிக்கப்பட முடியும் என்பதிலே சந்தேகமில்லை. இவ்வாறு கற்றுக்கொள்வது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆசீர்வாதமானதாகவே இருக்கப்போகின்றது.

யூதர்களின் வரலாறு (இஸ்ரவேல் வரலாறு) ஆபிரகாமிலிருந்து ஆரம்பமாகின்றது. ஆபிரகாம் யூதர்களின் தகப்பன் ஆவார். ஆபிரகாமிலிருந்துதான் யூதர்களின் வரலாறு ஆரம்பமாகிறது என்பதனை வேதாகமத்தின் மூலமாகவும், வரலாற்றின் அடிப்படையிலும் புரிந்துகொள்கிறோம். பூமியில் வாழ்ந்த ஏராளமான மக்களிலிருந்து தேவன் ஆபிரகாமை தெரிந்தெடுத்தார். ஆபிரகாமும் தேவனை பின்பற்றுகிற மனிதனாக இருந்தார். தேவனை பின்பற்றி செல்வதற்கான மனமுடையவராக இருந்தார். ஆகவே தேவன் ஆபிரகாமுக்கு அழைப்பு கொடுத்தார். அவனை வெளியே வரச்சொல்லி, தனக்கென பிரித்தெடுக்கப்பட்ட ஒரு சந்ததியை ஏற்படுத்தும்படிக்கே தேவன் ஆபிரகாமை அழைத்தார். ஆதியாகமம் 12:1-3, ‘‘கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.’’

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாமுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கின்றது. ஒருவேளை நாம் புறஜாதியாராக இருந்தாலும் (யூதர்கள் அல்லாதவர்கள்), ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்ற நிலையிலே இருக்கிறபடியினாலே, நாமும் ஆபிரகாமினுடைய சந்ததியாக கருதப்படுகிற

இடத்தில்தான் இருக்கின்றோம். ஆகவே, பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாமுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டதாகவே இருக்கின்றது என்பதனை அறிந்து கொள்கிறோம். தேவன் ஆபிரகாமுக்கு வாக்குபண்ணினார். அந்த வாக்குத்தத்தம் வரலாற்றின் அடிப்படையிலே பார்க்கும்போதுகூட இன்று இங்கேவரைக்கும், இதுவரைக்கும் அவருடைய வம்சம், பூமியிலுள்ள அனைத்து வம்சங்களும் ஆசீர்வதிக்கப்பட்ட இடத்திலே இருக்கும்படி தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி வைத்திருக்கின்றார் என்பது நமக்கு ஆச்சர்யமான உண்மையாக இருக்கின்றது. தேவன் ஆபிரகாமை பிரித்தெடுத்தார், தகப்பனுடைய வீட்டையும், தன்னுடைய இனத்தையும், தன் தேசத்தையும் விட்டு புறப்படு என்று வெளியே அழைத்துக்கொண்டு வந்தார். இவ்விதமாக ஆபிரகாமை பிரித்தெடுத்து பெரிய ஜாதியாக்கி, ஆபிரகாமின் மூலமாக யூதர்களை பெரிய ஜாதியாக்கி விசுவாசத்தின் அடிப்படையிலே ஆவிக்குரிய யூதர்கள் (இஸ்ரவேலர்கள்) என்கிற நிலையிலே புறஜாதியாராகிய நம்மையும் பெரிய ஜாதியாக்கி ஆசீர்வதிக்கப்பட்ட இடத்திற்கும் வரும்படி செய்திருக்கின்றார். தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தங்களையும், கட்டளைகளையும் கொடுத்தார். ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிற இடத்திலும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்படிகிற மனதுடையவனாக இருந்தபடியினாலும், வாக்குத்தத்தங்களை சுதந்தரித்து மேன்மையடைகிற இடத்துக்கு தேவன் ஆபிரகாமை கொண்டு வந்தார். இவ்விதமாக இஸ்ரவேல் ஒரு தேசமாக உருவெடுப்பதற்கு ஆபிரகாமும் அவனுடைய சந்ததிகளும் முக்கிய காரணமாக இருக்கின்றார்கள். யூதர்களுடைய வரலாற்றை வாசிக்கும்போது எத்தனையோ இடர்பாடுகளையும் வேதனைகளையும் அவர்கள் கடந்துவந்திருக்கின்றதை நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது. குறிப்பாக, பாபிலோனுக்கு சிறைபட்டுப்போன சம்பவம், இதன் பின்பு யூதர்கள் தேசமெங்கிலும் சிதறடிக்கப்பட்ட சம்பவம். பின்பு யூதர்கள் தங்கள் தாயகத்துக்கு திரும்பி வந்ததினால் அது யூதர்களின் தேசமாகிய ‘‘இஸ்ரவேல் தேசம்’’ என்கிற தேசம் உருவெடுத்ததையும் நாம் பார்க்கின்றோம். பாடுகளினூடேயே கடந்துவரவேண்டியதாக இருந்தாலும் தேவன் தான் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி பெரிய ஜாதியாக இஸ்ரவேலரை ஒரு தேசமாக ஆசீர்வதித்திருக்கிறதை பார்க்கின்றோம்.

இஸ்ரவேல் வரலாற்றை கற்றுக்கொள்வதினால் நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள்:

**1. தேவன் நமக்கு கொடுத்த, சொன்ன தம்முடைய வாக்குத்தத்தத்தை, தான் சொன்னபடியே நிறைவேற்றுகிறவர்.**

இஸ்ரவேல் வரலாற்றிலும், உலக வரலாற்றிலும், நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்வின் வரலாற்றிலும் அவர், தான் சொன்னபடி செய்கிறவர் என்பதனை இவ்வரலாற்றை படிக்கிறதினால் அறிந்துகொள்ள முடியும். தேவன் தான் சொன்ன வாக்குத்தத்தத்தின்படி செய்கிறவர்.

**2. வேதாகமம் உண்மையானது என்பதனை வரலாற்றின் அடிப்படையிலே நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது.**

நாம் இஸ்ரவேல் வரலாற்றை படிக்கும்போது, வெதாகமத்திலுள்ள காரியங்களை மாத்திரம் படிக்கிறதில்லை, ''யோஷிபஸ்'' என்பவருடைய எழுத்துக்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றை கற்றுக்கொள்கிறோம், சமகாலத்தில் காணப்பட்ட மற்ற அரசர்கள், அவர்களது வாழ்க்கை, அவர்களைப் பற்றியதான குறிப்புகள், ஆகிய எல்லாவற்றையும் விளக்கமாக இந்த வரலாற்றை படிக்கும்போது கற்றுக்கொள்வதினாலே வேதாகமம் வரலாற்றின் அடிப்படையிலே உண்மையானது என்று மிக உறுதியாக அறிந்துகொள்கிறோம். தேவன் கூறியவைகள், வேதாகம நிகழ்வுகள் ஆகிய எல்லாமே உண்மையானது என்பதற்கு இஸ்ரவேல் வரலாற்றைப் பற்றி நாம் படிக்கின்ற இந்த படிப்பு நமக்கு மிகப்பெரிய சான்றாக, ஆதாரமாக இருக்கின்றது.

**3. வேதாகமத்தின் சம்பவங்களை நாம் தெளிவுபட புரிந்துகொள்வதற்கு ''இஸ்ரவேல் வரலாறு'' நமக்கு உதவுகிறது.**

வேதாகம சம்பவங்களை வரலாற்று ஆதாரத்தோடு, பின்னணியத்தோடு விளக்கமாக கற்றுக்கொள்வதினால் வேதாகமத்தை தெளிவாகவும், விளக்கமாகவும் புரிந்துகொள்கிற இடத்திற்கு நாம் வந்துவிடுகிறோம்.

**4. இஸ்ரவேல் வரலாற்றினூடே நம்முடைய தேவன் மாறாதவர் என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது.**

நாமும் தேவனுடைய சுபாவத்தை நமக்குள்ளே உடையவர்களாக இருந்து, கொடுக்கிற வாக்குறுதிகளில் மாறாதவர்களாக, நமக்குள்ளே நாம் கொண்டிருக்கிற

தேவனுடைய குணாதிசங்களில் மாறாதவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய தேவன், மாறாதவர். தான் சொன்ன வாக்குத்தத்தங்களை நிறைவேற்றிக்கொண்டே வரலாற்றினூடே செயல்படுகிறதைக் காண்கின்றோம். தேவன் தம்முடைய சுபாவத்தோடு நம்முடைய சுபாவத்தை இனைத்து பேசுகிறதை நாம் வேதாகமத்தில் பார்க்கின்றோம். உதாரணமாக, நான் பரிசுத்தர், ஆகவே நீங்கள் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் என்று தேவன் சொல்லுகிறதை 1 பேதுரு 1:15, 16ல் பார்க்கின்றோம். தேவன் மாறாதவர், ஆகவே நாமும் மாறாதவர்களாகவே இருக்க வேண்டும். அநேக மனிதர்களைள பார்க்கின்றோம், அவர்கள் எழுத்துவடிவத்திலே தராத வரையில், என்னென்னமோ சொல்லுகிறார்கள், அவர் கூறியவற்றை, நாம் திரும்ப நினைவுபடுத்தி கேட்கும்போது, தான் கூறவேயில்லையென்று மாற்றி பேசுகிறார்கள். மனிதர்கள் மிக எளிதாக மாறிவிடுகிறவர்கள். ஆனால் கர்த்தர் நம்மிடம் சொல்லுகிறார், உத்தமமாய் நட, வேதத்தின்படி நட, நான் மாறாதவராயிருக்கின்றதுபோல, நீயும் மாறாதவனாக இரு. அப்பொழுது என்னுடைய தன்மைகளை நீ வெளிப்படுத்துகிறவனாக இருப்பாய் என்று தேவன் சொல்லுகிறார். சொல்லுகிறது ஒன்று, செய்கிறது ஒன்று என்று இல்லாமல், சொல்லும் செயலும் ஒன்றுபோல் காணப்படுகிற இடத்தில் நாம் இருப்போம் என்று தேவன் இவ்வரலாற்றினூடே நமக்கு கற்றுத்தருகிறார்.

**5. இஸ்ரவேலர் என்னென்ன தவறுகளை செய்தார்கள் என்பதனையும் அதனோடு நம்முடைய தவறுகளை ஒப்பிட்டுப் பார்த்து சரிசெய்துகொள்ள உதவியாக இருக்கின்றது.**

இஸ்ரவேலர் காலத்திற்கும், இப்பொழுதுள்ள நம்முடைய காலத்திற்குமான சூழ்நிலைகள் மாறியிருக்கலாம், ஆனால் பிரச்சனை ஒன்றுதான். இஸ்ரவேலர்களுக்குள் காணப்பட்ட தவறுகள் எவ்விதமாய் நமக்குள்ளும் காணப்படுகிறது என்பதனை அறிந்துகொள்வதற்கும், தவறுகளை சீர்திருத்திக் கொள்வதற்கும், மீண்டும் மீண்டும் தவறுகளை செய்யாதபடிக்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் காணப்படவும் இந்த இஸ்ரவேல் வரலாற்றை படிக்கின்ற படிப்பு நமக்கு உதவி செய்கின்றது. ஏனென்றால் இவைகளை தேவன் நமக்கு திருஷ்டாந்தங்களாக வைத்திருக்கின்றார்.

**6. இஸ்ரவேலர் செய்த தவறுகளை தேவன் அவ்விதமாக பொறுத்துக்கொண்டார், எவ்விதமாக மன்னித்தார், எவ்விதமாக ஏற்றுக்கொண்டு அவர்களை வழிநடத்தினார். தம்முடைய ராஜ்ஜியத்துக்கு நேராய் அவர்களை அழைத்துச்செல்ல எவ்வளவு நீடிய பொறுமையுடையவராக இருந்தார் என்பதனையெல்லாம் அறிந்துகொள்ள முடிகிறது.**

தேவன் இஸ்ரவேலருக்கு செய்ததுபோலவே, நம்மை நேசித்து, நம்மை மன்னித்து, சீர்திருத்தி, தெளிவாக காண்கிறவர்களாக, ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆரோக்கியமான வளர்ச்சியை பெற்றுக்கொள்கிறவர்களாக நம்மை வழிநடத்தி ஆசீர்வதிக்கின்றார். தேவன் நம்மை விட்டுவிலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை என்பதனை இஸ்ரவேல் வரலாறு நமக்கு தெளிவாக போதிக்கின்றது. முரட்டாட்டமும், வணங்காக் கழுத்துள்ளவர்களாக இஸ்ரவேலருக்கே தேவன் மனதிரங்கி மன்னித்து இன்றுவரை ஆசீர்வாதமாக நடத்துவாரானால், நம்மையும் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளாக வைத்து, ஆசீர்வாதமான இடத்திலே நம்மை வைத்து நடத்துகிற வல்ல தேவன்தான் நம்முடைய தேவன். நம்முடைய மீறுதல்களையும் தேவன் கிருபையாய் மன்னித்து, அவருக்குள் நம்மை வாழவைக்க முடியும் என்கிற நம்பிக்கை நம்மை அதிகமாக உற்சாகமடைய வைக்கின்றது.

**7. நாம் தேவனை தெரிந்தெடுக்கும் உரிமையும், தேவனை தெரிந்தெடுக்காத உரிமையும் நம்முடையதாக இருக்கின்றது என்பதனை இந்த இஸ்ரவேல் வரலாறு நமக்கு கற்றுத் தருகிறது.**

இஸ்ரவேலரிடமே தெரிந்தெடுக்கும் அந்த பொறுப்பை தேவன் கொடுத்தார். கட்டளையை கைக்கொள்ளவோ, கைக்கொள்ளாமல் இருக்கவோ எதை நாம் தெரிவுசெய்ய வேண்டும் என்கிறதை நம்முடைய செயலாக தேவன் கொடுத்து விடுகிறார். கைக்கொண்டால் ஆசீர்வாதம், கைக்கொள்ளாவிட்டால் சாபம் என்பதனையும் சொல்ல தேவன் தவறவில்லை. தேர்ந்தெடுக்கும் திறனை தேவன் நமக்கு கொடுத்திருக்கின்றார். தேவன் நம்மை கட்டாயப்படுத்துகிறவர் அல்ல. தேர்ந்தெடுக்கும் பொறுப்பை நம் முன்னே வைக்கின்றார். நாம்தான் சரியானதை தேர்ந்தெடுக்க வேண்டும். தேவனுக்காக வாழ்வதையோ, அல்லது தேவனைவிட்டு தூரம்போகின்றதையோ, தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு நம்முடையது. பாவம் செய்யாமலிருப்பதோ, பாவத்தைச் செய்வதோ தேர்ந்தெடுக்ககூடிய பொறுப்பு

நம்முடையது. நாம் பெற்றுக்கொள்ளப்போகிற விளைவு நாம் தேர்ந்தெடுக்கும் விதங்களை பொறுத்தே அமையக்கூடியதாக இருக்கிறது. கட்டளைகளை கைக்கொள்ள, பாவம் செய்யாமலிருக்க, தேவனுக்காக வாழ்வு என்று நம்முடைய தேர்ந்தெடுப்பு சரியானதாக இருந்தால், நாம் நல்ல விளைவுகளை பெற்றுக்கொள்வோம், இவைகளுக்கு எதிரிடையாக காணப்படுகிறவைகளை நாம் தேர்ந்தெடுக்கும்போது பாதகமான விளைவுகளையே பெற்றுக்கொள்வோம்.

இஸ்ரவேல் வரலாற்றிலே நாம் அதைத்தான் பார்க்கின்றோம். அவர்கள் எவைகளை தெரிந்தெடுத்தார்களோ அதனடிப்படையில் அதற்குரிய விளைவுகளை பெற்றுக்கொண்டார்கள். ஆகவே நாம் புரிந்துகொள்கிறோம், நான் பெற்றுக்கொள்ளப்போகிற விளைவு என்னுடைய தேர்ந்தெடுக்கும் திறனை பயன்படுத்துகிறதில் இருக்கிறதென்று. தேவன் இந்த அருமையான, நம்முடைய வாழ்வுக்கு மிகவும் அவசியமான இந்த அனுபவத்தை இஸ்ரவேல் வரலாற்றின் மூலமாக நமக்கு கற்றுத் தருகிறார்.

**8. இன்று மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கின்ற சம்பவங்களை புரிந்துகொள்ள இந்த இஸ்ரவேல் வரலாறு உதவி செய்கின்றது.**

மத்திய கிழக்க நாடுகளில் நடக்கின்ற சம்பவங்கள் எதன் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதனை அறிந்துகொள்ள இஸ்ரவேல் ஜனங்களுடைய வரலாறு உதவுகிறது. இஸ்ரவேல் வரலாறு எதிர்காலங்களை நிர்ணயிக்க கூடியதாக இருக்கின்றது. தேவன் எதிர்காலங்களைக் குறித்து மேலான திட்டம உடைய தேவனாக இருக்கின்றார். இனி எவ்விதமாக இந்த உலகம் நியாயந்தீர்க்கப்படும். இந்த உலகத்தின் முடிவு எதை நோக்கி போய்க்கொண்டிருக்கிது என்பதெல்லாம் தேவனுடைய திட்டத்தில்தான் இருக்கின்றது. தேவன் ஏற்கனவே திட்டம் பண்ணி முடிவுசெய்துவிட்டார். தேவன் தன்னுடைய திட்டங்களை எவ்விதமாக உலக வரலாற்றிலே செயல்படுத்த துவங்கினாரோ அவ்விதமாகவே உலக வரலாறு சென்றுகொண்டிருக்கின்றது. விசேஷமாக இஸ்ரவேல் வரலாற்றிலே தேவன் தம்முடைய திட்டங்களை மிக துல்லியமாக நிறைவேற்றுகிறவராக இருக்கின்றார். வரப்போகிற உலக வரலாற்றின் நிழலாட்டத்தைத்தான் இந்த இஸ்ரவேல் வரலாற்றிலே பார்க்கின்றோம்.

இஸ்ரவேல் வரலாறு உலக வரலாற்றின் எதிர்காலங்களை நிர்ணயிக்க கூடியதாக இருக்கின்றது. இஸ்ரவேல் வரலாற்றிலே நடைபெறுகிற சம்பவங்கள்,

நிறைவேறுகிற தீர்க்கதரிசனங்கள், உலக வரலாற்றிலே தாக்கங்களை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அளவிலே பிரதிபலிக்க கூடியதாக இருக்கின்றது. உலக நிகழ்வுகள், இஸ்ரவேல் வரலாற்றை தொடர்புப்படுத்தி, இஸ்ரவேல் வரலாற்றோடு சார்புடையதாய் இருந்தே நடைபெறக்கூடியதாக இருப்பதனால் நாம் இஸ்ரவேல் வரலாற்றை கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. உலகத்தின் மையப்பகுதியில் இருப்பதும் இஸ்ரவேல் தேசமே என்பதனை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய திட்டத்தின் மையப்பகுதியியல் இருப்பதும், இஸ்ரவேல் ஜனங்களே: உலக வரலாற்றை நிர்ணயிக்ககூடிய நிலையில் மையப்பகுதியில் இருப்பதும் இஸ்ரவேல் தேசத்தின் வரலாறுதான். இஸ்ரவேலர் செயல்படுகிற விதத்தைப் பொறுத்துதான் உலகத்தின் காரியங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றது என்று வேதத்தின் அடிப்படையில் புரிந்துகொள்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களின் கீழ்ப்படிதலும் அதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற ஆசீர்வாதங்களும் உலக ஆசீர்வாதங்களுக்கு வித்திடக்கூடியதாக இருக்கின்றது. இஸ்ரவேலரின் மீறுதலினால் ஏற்படுகிற பாதிப்புகளும், உலகளாவிய விதத்தில் பரவக்கூடியதாக இருக்கின்றது. இஸ்ரவேல் வரலாறு உலக வரலாற்றோடு இணைந்ததாகவும், எப்பொழுதும் தொடர்புடையதாகவும் இருக்கின்றது.

**9. இஸ்ரவேல் வரலாற்றை இறையியல் அணுகுமுறையோடு படிக்கின்றபோது, இஸ்ரவேல் வரலாற்றிலே காணப்பட்ட தேவ வழிபாட்டு முறையையும் அறிந்துகொள்ளலாம்.**

எப்படிப்பட்ட சூழ்நிலையில் இஸ்ரவேலர் ஆராதனை செய்தார்கள்? அன்றைய காலங்களில் அவர்களுடைய கரங்களில் இருந்த வேதாகமத்தின் நிலை என்ன? அது எவ்விதமாய் எழுதப்பட்டு எவ்வாறு பராமரிக்கப்பட்டது? இஸ்ரவேலரின் தொழுகையின் வழிமுறைகள் எவ்விதமாய் இருந்தது? இஸ்ரவேலரின் சமயவாழ்வு எவ்விதமாய் இருந்தது என்பதையெல்லாம் சேர்த்து படிக்கும்போது, நாம் உண்மையாகவே, முழுமையான நிலையிலே வேதாகமத்தை தெளிவாக புரிந்துகொள்ள இது உதவி செய்யக்கூடியதாக இருக்கின்றது.

**10. இஸ்ரவேல் வரலாறே ஆவிக்குரிய வரலாறாக இருக்கின்றது**

இஸ்ரவேல் வரலாறே ஆவிக்குரிய வரலாறாகத்தான் இருக்கின்றது என்று சொல்லவேண்டும். ஏனென்றால் தேவன் இஸ்ரவேல் வரலாற்றிலே இடைபடுகிறார். இஸ்ரவேலரை தேவன் வழிநடத்துகிறார்.

தேவன் இஸ்ரவேல் வரலாற்றிலே நிகழ்த்தின அந்த சம்பவங்களை கொண்டுதான் அவர்களது வரலாறு எழுதப்படுகிறது. ஆகவே தேவனையும், இஸ்ரவேல் வரலாற்றையும் பிரிக்க முடியாது. இஸ்ரவேல் வரலாற்றிலே எப்படி தேவனையும், இஸ்ரவேலரையும் பிரிக்க முடியாத நிலை காணப்படுகிறதோ, அவ்விதமாய் நம்முடைய வாழ்விலும் தேவனுடைய இடைபடுதலும், வழிநடத்துதலும் உண்டாயிருக்கும்படி, தேவனோடுள்ள நம்முடைய உறவும், ஐக்கியமும் நாளுக்கு நாள் அதிகரிக்க வேண்டும். அவரை அதிகமாய் கிட்டி நெருங்கிக்கொண்டும் இருக்க வேண்டும்.

நம்முடைய வாழ்வில் சற்று முன்னர் நடைபெற்ற நிகழ்வுக்ள தேவனுடைய இடைபடுதலோடும், தேவனுடைய வழிநடத்துதலோடும் நடைபெற்றதாக இருந்திருக்குமானால் அதுதான் அருமையான ஆவிக்குரிய தன்மையுள்ள நம்மைப்பற்றியதான வரலாறு. ரோமர் 8:28, **''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.''**

தேவனிடத்தில் அன்புகூறுகிற நம்மிடத்தில் தேவன் சகலவற்றையும் நன்மைக்கேதுவாகத்தான் நடத்துகின்றார். இப்படியாக தேவன் நம்மிடத்தில் நடப்பிக்கின்ற இந்த நிகழ்வுகள்தான் நம்மைப்பற்றியதான இனிமையான வரலாறு. நம்முடைய வாழ்விலே சில நிகழ்வுகள் நமக்கு தீமையைக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. ஆனால் நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களாய் இருப்பதினாலே அந்த தீமையானது நன்மையானதாக மாறிவிடுகிறது. தேவன் நம்முடைய வாழ்விலே குறுக்கிடுவதால், நம்முடைய வாழ்வில் நடைபெறுகிற நிகழ்வுகள் வரலாறாக இருக்கின்றது. இவ்விதமாக நம்முடைய வரலாற்றிலோ, இஸ்ரவேல் வரலாற்றிலோ, உலக வரலாற்றிலோ பாதிப்புகளை, மாற்றங்களை ஏற்படுத்துகிறவர் தேவனே. நாம் நற்கிரியைகளை செய்யும்படி அதை ஆயத்தப்படுத்தி நம்மை முன்குறித்து அழைத்தவர் தேவன். நாம் இன்ன இன்ன காரியங்களை செய்யும்படி தேவன் அவைகளை முன்பதாகவே ஆயத்தம்பண்ணியிருக்கிறதினால் தேவனால் நம்முடைய வரலாறு முன்கூட்டியே எழுதப்பட்டதாக இருக்கின்றது என்பதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். தேவன் நம்முடைய வாழ்வில் தலையிட்டதினால் நம்முடைய வரலாறு

சிறப்பானதாக மாறுகின்றது. தேவன் இல்லாத வாழ்வாக என் வாழ்வு காணப்பட்டால் என் வரலாறு வேறுவிதமாக போயிருக்கும், சிறப்பானதாக இராது. என்னுடைய, உங்களுடைய, இஸ்ரவேலருடைய, உலகநாடுகளுடைய வரலாற்றை தேவனே நிர்ணயிக்கின்றவராக இருக்கின்றபடியினால், நம்மையும், தேவனையும், தேவனையும் இஸ்ரவேலரையும், தேவனையும் உலக வரலாற்றையும் பிரிக்கவே முடியாது.

## இஸ்ரவேல் வரலாறு

இஸ்ரவேல் வரலாறு ஆபிரகாமில் துவங்குகிறதாய் இருக்கிறது. யூத ஜனங்கள் என்றழைக்கப்டுகின்ற இஸ்ரவேல் ஜனங்கள் ஆபிரகாமிலிருந்து தோன்றிய வம்சாவழியாய் இருக்கின்றார்கள். இவர்கள் ஒரே தேவ கொள்கை உடையவர்கள். அந்த தேவனே உலகை சிருஷ்டித்தவர் என்று நம்புகிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்கள் கோத்திரப் பிதாக்களென்று இஸ்ரவேலர்கள் வரலாற்றிலே அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் கானான் தேசத்திலே வாழ்ந்து வந்தார்கள். அந்த தேசமே, அந்த நிலப்பகுதியே இஸ்ரவேல் என்று பின்நாட்களில் அழைக்கப்பட்டது. இஸ்ரவேல் என்ற பெயர் யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட பெயர் என்பதை நாம் அறிவோம். அதிலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்கான இந்த பெயர் வந்தது என்று நாம் சொல்லலாம். ஆதி.32:28ம் வசனத்திலே இவ்விதமாய் வாசிக்கின்றோம். அப்பொழுது அவர் உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும், தேவனோடும், மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே என்றார் என்று அங்கே நாம் வாசிக்கின்றோம். ஆகவே இஸ்ரவேல் என்ற இந்த தேசத்திற்கான பெயர் யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட பெயரிலிருந்து வந்தது என்பதனை நாம் வேதத்தின் அடிப்படையிலே அறிகின்றோம். இந்த யாக்கோபினுடைய பன்னிரண்டு குமாரர்கள் பன்னிரண்டு கோத்திரங்களாய் காணப்பட்டார்கள். இவர்களே இந்த இஸ்ரவேல் தேசத்தினுடைய மக்கள் என்று சொல்ல வேண்டும்.

யூதர்கள் என்ற பெயர் யாக்கோபினுடைய பிள்ளைகளில் யூதா என்பவரின் பெயரிலிருந்து மருவி வந்தது என்று சொல்லப்படுகிறது. இந்த இஸ்ரவேல் தேசமானது உருவானது கி.மு.1300 என்று சொல்லப்படுகிறது. எகிப்து தேசத்திலிருந்து இந்த ஆபிரகாமின் வழித் தோன்றல்கள் வெளியேறி யாத்திரையாக வெளியே புறப்பட்டு வந்து, மோசேயின் தலைமையின் கீழ் வெளியே

வந்து அவர்கள் நாற்பது ஆண்டு காலமாக சீனாய் வனாந்தரத்திலே நடத்தப்பட்டு, பிறகு இஸ்ரவேல் என்ற இந்த நிலப்பகுதியிலே அவர்கள் வந்து குடியேறினார்கள். அதாவது கானான் தேசத்தில் வந்து குறியேறினதுதான் இஸ்ரவேல் என்ற ஒரு தேசத்தின் தோற்றமாக அமைகிறது. அதனை நாம் வரலாற்றில் பார்க்கும்போதும், அதைப்போல நாம் வேதாகமத்தில் பார்க்கும்போதும் அது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமி என்று அழைக்கப்படுகிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் வம்சாவழியினர் கோத்திரப் பிதாக்களாய் அங்கே வந்து குடியேறுகின்றார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திலே அவர்கள் வந்து குடியேறிய அந்த கானானன் தேசம் பின்பு இஸ்ரவேல் தேசம் என்று அழைக்கப்பட்டதாய் இருக்கிறது. இந்த இஸ்ரவேல் தேசம் மாத்திரமே அதே பேரிலே, அதே மொழியைப் பேசுகிறவர்களாக, அதே தேவனை வணங்குகிறவர்களாக சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பதாக ஆரம்பித்த அதே காரியம் இன்றுவரை அதே விதமாக காணப்படுகிற ஒரு விசேஷித்த தேசமாய் இருக்கின்றது. நாம் அநேக நாடுகளுடைய வரலாற்றை பார்க்கிறோம். அதிலே பலதரப்பட்ட கலாச்சாரங்கள், பலதரப்பட்ட மொழிமாற்றங்கள் என்னவெல்லாமோ நடந்து விடுகிறது. ஆட்சியாளர்கள் மாறி, இல்லாவிட்டால் அதன் பெயர்கள் மாறிவிடுகிறதை பல வரலாற்றில் பார்க்கிறோம். ஆனால் இஸ்ரவேல் தேசம் மாத்திரம் சுமார் 3300 ஆண்டுகளாக ஒரேபேரில், ஒரே தேவனை வணங்கிக்கொண்டு, ஒரே மொழியைப் பேசிக்கொண்டு, ஒரே தேசத்தின் பெயரை வைத்துக்கொண்டிருக்கிற தேசமாய் இருக்கின்றது. இன்னும் அந்த தேசத்திற்கு அடிகோல் நாட்டிய அந்த ஆபிரகாமின் வம்சத்தினர் அதே கலாச்சாரத்தோடு வாழ்ந்து வருகிறவர்களாக காணப்படுகிறார்கள். அதே மொழியை உடையவர்களாக காணப்படுகிறார்களென்று நான் உங்களுக்கு சற்று முன்னர் கூறினேன்.

இஸ்ரவேல் தேசத்தில் இவர்களுடைய ஆட்சி யோசுவா கி.மு.1250ம் ஆண்டு காலத்தில், இந்த கானானைக் கைப்பற்றி அதற்கு பின்பதாக ஆளுகைசெய்ய ஆரம்பித்தனர் என்பதை நாம் பார்க்கின்றோம். கி.மு. 1000 – 587 வரை நாம் இராஜாக்களின் காலம் என்று அழைக்கிறோம். இந்த காலத்தில் ஆட்சி செய்த தாவீது அரசன், சாலொமோன் அரசன் இப்படிப்பட்டவர்கள் மிக முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். தாவீது தான், எருசலேமை இஸ்ரவேல்

தேசத்தின் தலைநகரமாக உருவாக்குகின்றான். சாலொமோன் முதலாவது தேவாலயத்தைத் எருசலேமில் கட்டியவராகக் காணப்படுகிறார். நாம் இந்த குறிப்புகளை பழைய ஏற்பாட்டிலே பார்க்கின்றோம். கி.மு. 587ல் பாபிலோனிய படையெடுப்பு நிகழ்ந்தது, நேபுகாத்நேச்சாருடைய இராணுவம் எருசலேமைக் கைப்பற்றி தேவலயத்தை இடடித்துப்போட்டார்கள். மட்டுமல்ல யூதர்கள் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். இந்த பாபிலோன் நவீன கால ஈராக் என்று அறியப்படுகிறது. இந்த கோத்திர பிதாக்களின் காலம் குறித்து சற்று நன்கு தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

வேதாகமத்தில் கோத்திரப் பிதாக்கள் மூவர். அதாவது, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களே. இதை நாம் வேதத்தில் அடிக்கடி தேவன் சொல்லக் கேட்டிருப்போம். நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருக்கிறேன் என்று சொல்லக்கேட்டிருக்கின்றோம். அவர்கள்தான் கோத்திரப்பிதாக்கள் என அழைக்கப்படுகிறார்கள். இவர்களோடு யோசேப்பையும் சிலர் சேர்த்துக்கொண்டு சொல்வதுண்டு. இந்த கோத்திரப் பிதாக்கள் ஐசுவரியத்திலும், சம்பத்திலும், மதிப்பிலும், சிறப்பான நிலையிலிருந்தார்கள். இவர்கள் கூடாரங்களில் குடியிருந்தார்கள் என்று நாம் அறிகின்றோம். அதனால், இவர்களின் சொத்துக்களைப் பார்த்தால் அசையாச் சொத்துக்களாகவே இருந்தன. அதாவது ஒரு இடம் விட்டு மற்றொரு இடம் இவர்கள் சொத்துக்கள் இடம்பெயர்ந்துகொண்டேயிருக்கும். அப்படியாக வாழ்ந்தார்கள். கூடாரத்தில் குடியிருந்தார்கள் என்று சொல்லப்படுகிறதை நாம் வேதத்திலே வாசித்துப் பார்க்கின்றோம். அப்படி இருந்தபோதிலும் இவர்கள் நாகரீக பண்பாட்டில் மிகவும் சிறந்தவர்களாக காணப்பட்டிருக்கிறார்கள் என்பதனை நாம் வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

எருசலேமைச் சுற்றியுள்ள பழைய பட்டணங்களை தோண்டி எடுத்து ஆராய்சி செய்தபோது, தொல்பொருள் ஆராய்சி மூலம் தோண்டி எடுக்கப்பட்ட அந்த சான்றுகளை வைத்து பார்க்கும்போது அந்த கோத்திரப்பிதாக்களின் நாட்களிலுள்ள கலாச்சார பண்பாட்டை நாம் நன்கு அறியமுடிகிறது. ஒருவன் தேவனிடத்தில் வந்தாலே அவனுடைய கலாச்சாரமும், அவனுடைய ஒழுக்கமும் அதிகமாகும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். உலகில் எத்தனைதான் படித்திருந்தாலும்,

ஒழுக்கம் என்பது சிலருக்கு வருவதில்லை. பண்பாடு என்பது, நாகரீகம் என்பது சிலருக்கு வருகிறதில்லை. ஆனால் தேவனோடு வாழுகிற படிக்காத ஒரு மனிதனாக இருந்தாலும் அவன் தன்னை தேவனோடு இணைந்துகொள்ளும்போது, தேவனைத் தொழுதுகொள்கிறவனாகும்போது அவன் நாகரீகம் உள்ளவனாக, பண்பாடு உள்ளவனாக மாறிவிடுகிறான் என்பதனை நாம் வரலாற்று அடிப்படையிலே தெரிந்துகொள்ள முடியும். உங்கள் வாழ்விலும் அப்படிப்பட்ட மாற்றத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அடுத்தது கல்தேயரின் பட்டணமாகிய ஊரைப் பற்றி நாம் அறிந்துகொள்ளப்போகிறோம். ஆதியாகமம் 11:31ன்படி ஆபிரகாம் மற்றும் தேராகு, ஊர் எனும் கல்தேய பட்டணத்தை விட்டு விட்டு மெசபதோமியாவிற்கு வடக்கே உள்ள ஆரான் என்னும் பட்டணத்தில் குடியிருந்தார்கள் என்று பார்க்கிறோம். இந்த சம்பவம் சுமார் கி.மு. 20ம் நூற்றாண்டில் நடந்தது என்று வரலாறு கூறுகிறது. அந்நாட்களில் இந்த பட்டணம் மிகவும் ஐசுவரியம் நிறைந்ததாய் இருந்திருக்கின்றது. பின்பு எமோரியர்களால் அழிக்கப்பட்டது என்று தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகின்றது. இப்பட்டணம் பிற்காலங்களில் பாபிலோனியர் மற்றும் பெர்சியரால் மீண்டும் கட்டப்பட்டிருக்கிறது. தேராகு, ஆபிராம் என்பவர்கள் சுமேரியரின் பண்பாடுகளை பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கின்றனர். தேவன் அவர்களுக்கு கொடுத்த வெளிப்பாட்டை நம்பி, ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான் தேசத்தையும், பெற்றுக்கொள்வோம் என்கிற நம்பிக்கையிலே விக்கிரகங்கள் நிறைந்த சுமேரியரின் பட்டணங்களைவிட்டு பரதேசிகளாய் பிரயாணம்பண்ணி இவர்கள் வந்திருக்கிறார்கள். ஆபிரகாம் இவ்விதமாகத்தான் பிரயாணப்பட்டு வந்தார். அவருக்கு அவருடைய அழைப்பின்போது கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமும் அதுதானே.

## ஆபிரகாமுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்:

ஆதியாகமம் 12:1-3 - கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். இவ்விதமாக தேவன் கொடுத்த இந்த

கட்டளைகளுக்கு கீழ்படிந்தும், தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை நம்பியும், ஆபிரகாம் அந்த விக்கிரகங்கள் நிறைந்த சுமேரியரின் பட்டணத்தை விட்டு பரதேசியாய் பிரயாணப்பட்டு கானான் தேசத்தை நோக்கி புறப்பட்டு வந்தார். கீழ்படிதலுக்கு ஆபிரகாம் நல்லதொரு முன்மாதிரியாக இருக்கிறார். விசுவாசம் இருந்தால் மாத்திரம் போதாது, அதோடு கீழ்படிதலும் இருக்க வேண்டுமென்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். ஆபிரகாமுக்கு, தான் எங்கே போகிறோம் என்று தெரியாது, ஆனால் விசுவாசத்தோடு புறப்பட்டு சென்றார். எங்கே போகிறோம் என்பது ஆபிரகாமுக்கு தெரியாதிருந்தது. ஆனால் யார் தன்னை நடத்துகிறார் என்பதனை மிக தெளிவாக ஆபிரகாம் அறிந்திருந்தார். நம்முடைய வாழ்க்கையிலும் கூட இப்படித்தான் ஒருவேளை எங்கே நாம் போகின்றோம் என்பது நமக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் யார் நம்மை நடத்துகிறார் என்பதையும், எங்கே நோக்கி நாம் வழிநடத்தப்படுகிறோம் என்பதையும், நம்மை நடத்துகிறவர் நாம் போகவேண்டிய இடத்திற்கு நம்மை சரியாக வழிநடத்திச் செல்ல வல்லவராக இருக்கின்றார் என்பதையும் நாம் தெளிவாக அறிந்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். அவர் நம்மை மரணபரியந்தமும் நடத்த வல்லமையுள்ளவர் நம்மை எங்கே கொண்டுபோய் நிலைநிறுத்த வேண்டுமோ, மேன்மைப்படுத்த வேண்டுமோ, அங்கே கொண்டுபோய் நம்மை மேன்மைப்படுத்தி வைப்பார். இந்த உலக வாழ்க்கை முடிகின்ற வேளையிலே நமக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற அந்த உன்னதமான பரலோக மேன்மைக்கும், நம்மை வழிநடத்த தேவன் வல்லமையும் உண்மையுமுள்ள தேவனாக இருக்கின்றார்.

**<u>ஆரான்</u>**

- ❖ ஊர் என்னும் பட்டணத்தைவிட்ட பின்பு ஆரானிலே வந்து ஆபிராம், தேராகு ஆகியோரும் இவர்களது குடும்பமும் குடியேறினார்கள்.
- ❖ இது மெசபத்தோமியாவிலுள்ள மற்றொரு இடம் ஆகும்.
- ❖ இங்குள்ள மக்கள் சந்திரதேவனை வணங்கினார்கள் என்று நாம் அறிய முடிகிறது.
- ❖ தேராகு இந்த ஆரானிலேயே தங்கிவிட்டான்.

❖ ஆபிரகாம் தேவனுடைய அழைப்பை உணர்ந்து இங்கேயிருந்து கானானுக்கு புறப்பட்டுச் சென்றார். தேராகும் கானானை நோக்கித்தான் பிரயாணப்பட்டு வந்தார். ஆனால் தேராகு என்பதற்கு தாமதம் என்கிற பொருள் இருக்கிறதின்படியே

கானானை நோக்கி போகிற பிரயாணத்திலே தாமதம் பண்ணினான். கானான் நோக்கி அவரது பிரயாணம் தொடராமல் தேராகு ஆரானிலேயே மரித்துவிட்டான் என்கிற வரலாறு சில வேதவல்லுநர்கள் தெளிவுபட கூறியுள்ளனர்.

❖ நம்முடைய வாழ்க்கையிலும் கூட தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்கு தடையாக ‘‘தாமதம’’ என்கிற இடையூறு நம்மிடம் இருக்கலாம். தாமதம் பண்ணுதல் இல்லாமல் நம்மை காத்துக்கொள்ள நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சோம்பேறித்தனம்தான் தாமதத்திற்கு நேராக வழிநடத்த கூடியது என்பதனை அறிந்து சோம்பேறித்தனத்தை நாம் தவிர்க்க வேண்டும். பிறகு பார்க்கலாம், இன்னும் கொஞ்சம் நாள் சென்றபிறகு பார்க்கலாம் என்கிற பிசாசின் வஞ்சனைக்கு இடம்கொடாதவாறு நாம் நம்மை காத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். மனம்திரும்பி இரட்சிக்கப்படுகிறதை பிறகு பார்த்துக்கொள்ளலாம், கர்த்தருக்காக, இன்னும் கொஞ்சகாலம் சென்ற பிற்பாடு ஊழியம் செய்து கொள்ளலாம். நான் எனக்காக, என் குடும்பத்திற்காக செய்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் ஏராளம் இருக்கிறது என்று தாமதம் பண்ணாதிருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும்.

❖ தாமதமான கீழ்ப்படிதலுக்கு, பெயர் மீறுதல் மற்றும் கீழ்படியாமை என்றே வேதவல்லுநர்கள் கூறுகின்றார்கள். தாமதம் நல்லதல்லவென்றும், அது நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய ஆசீர்வாதங்களை தடைசெய்துவிடும் என்றும் இஸ்ரவேல் வரலாற்றின் மூலமாக அறிந்துகொள்கிறோம். தாமதத்திற்கு பதிலாக தேவ அழைப்புக்கும், வழிநடத்துதலுக்கும் கீழ்படிகிற உணர்வுள்ள இருதயத்தை உடையவர்களாக நாம் இருக்க வேண்டும்.

❖ ஆரானிலே, ஆபிரகாமின் குடும்பம் வாழ்ந்த இடம் பதான்ஆரான் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு ‘‘ஆரான் நகரேன’’ என்கிற மறுபெயரும் உண்டு. ஆராம் நகரேன் என்கிறதற்கு இரு நதிகளுக்கு இடையேயுள்ள பகுதி என்று நாம் வரலாற்றிலே பார்க்கின்றோம். கி.மு. 19ம் நூற்றாண்டிலே இந்தப் பட்டணம் ஒரு வியாபார மையமாக இருந்தது என்று அந்த கால இலக்கியத்திலிருந்து அறிகிறோம் (ஆப்பு வடிவ இலக்கியம்).

## <u>எமோரியர்</u>

✓ அவர்கள் சுமேரியர் என்னும் ஜாதியினர்.

- ✓ கி.மு.3000ம் ஆண்டில் மெசபதோமியாவின் தென்பகுதியிலே வாழ்ந்தவர்கள்.
- ✓ இவர்கள் பட்டணங்களிலே குடியிருந்தார்கள் என்றும், அந்த ஒவ்வொரு பட்டணத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் இருந்தார்களென்றும் நாம் வரலாற்றின் உதவியோடு அறிந்துகொள்கிறோம்.
- ✓ பிற்காலங்களில் எழும்பின ராஜ்யங்களால் இந்த சுமேரியர்கள் நிலைநிற்க முடியாமல் விழுந்துபோனார்கள். அங்களுடைய பெலனற்ற நிலையிலே அங்கே வீழ்ச்சியடைந்தார்கள்.
- ✓ கி.மு.2000ம் ஆண்டிலே செமித்திய இனத்தைச் சார்ந்த எமோரியர் மேற்கத்திய மெசபத்தோமியா முழுவதையும் தாங்கள் ஆட்சியின்கீழ்கொண்டு வந்தார்கள் என்பதை வரலாற்றின் மூலமாக அறிந்துகொள்கிறோம்.

## ஆபிரகாமின் அழைப்பு

- ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து இந்த பழையஏற்பாட்டு வரலாற்றிலே முக்கிய திருப்பம் ஏற்படுகின்றது.
- பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்வுகளில், மனிதனுடைய படைப்புகளிலிருந்து, இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனுக்கு அடிமைப்பட்டு அங்கே சென்று, பின்பு அங்கேயிருந்து திரும்பி எருசலேமுக்கு வந்து தங்கிய வரையுள்ள வரலாற்றைக் காண்கிறோம்.
- உலகதோற்றமுதல் ஜலபிரளயம் வரையுள்ள வேதபகுதி மனித இனத்தின் பொதுவான வரலாறாக இருக்கின்றது. குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறதை ஆங்காங்கே பார்க்கின்றோம்.
- ஆபிரகாம் அழைக்கப்பட்டதிலிருந்து இஸ்ரவேலரின் வரலாறு ஆரம்பமாகிறது. அதற்கு முன்னர் உள்ள காலம் பொதுவான மனித இனத்தின் காலம் என்றழைக்கப்படுகிறது.
- கானான் தேசம் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்பதனை வேதத்திலிருந்து அறிந்திருக்கின்றோம். ஆபிரகாம் கானானிலே பரதேசியாக தங்கினபோது தேவனை விசுவாசித்து, அவருடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொண்டான்.

- தேவன் ஆபிரகாமின் மூலம், அவனைச் சுற்றிலும் வாழ்ந்த விக்கிரகாராதனைக்காரர்கள் மத்தியிலும் அவனை உண்மையான சாட்சியாக ஏற்படுத்தி வைத்திருந்தார் என்பதனை நாம் அறிய முடிகிறது.

நம்மையும் புறஜாதிகள் மத்தியிலே தேவனுக்குரிய உண்மையான சாட்சியாக ஏற்படுத்தவே தேவன் விரும்புகின்றார். அதற்காகத்தான் ஆபிரகாமை அழைத்த தேவன் நம்மையும் அழைத்திருக்கின்றார். நாம் தேவனுக்காக சாட்சியுள்ள வாழ்வு வாழ, நடமாடும் நிருபங்களாக, வாழ்ந்து காட்டும் வேதாகமமாக இருக்கவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். ஆபிரகாமை தேவன் அழைத்தபோது அவன் விசுவாசத்தோடு தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொண்டான்.

- தேவன் வாக்குத்தத்தமாக சொன்னதின்படியே ஆபிரகாமை கானானுக்கு கொண்டுவந்தார். ஆபிரகாம் கானானிலே பரதேசியாய் சஞ்சரித்தபோது தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை விசுவாசித்து, சுதந்தரித்து, மாபெரும் சந்ததியாக உருவெடுத்தார். நாமும்கூட புறஜாதியாராக இருந்தாலும் ஆபிரகாமின் சந்ததி என்று சொல்லப்படுகிற இடத்திலே தேவன் நம்மை வைத்திருக்கின்றார்.
- ஆபிரகாமின் சந்ததி வாக்குத்தத்தத்தின் சந்ததி என்றழைக்கப்படுகிறது. தேவனுடைய ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தத்தின் சந்ததியின்மேலே வரும் என்று திட்டவட்டமாக வேதம் கூறுகின்றது.
- ஆபிரகாமுக்கு தேவன் வாக்குபண்ணினார். மட்டுமல்ல அவனுடைய சந்ததிக்கும் தேவன் வாக்குபண்ணினார். ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன் என்கிற அந்த ஆசீர்வாதங்கள் அவனுடைய சந்ததியின்மேல் தொடர்ந்து இதுவரைக்கும் வந்துகொண்டே இருக்கின்றதை நாம் அறிந்திருக்கின்றோம்.
- தனிஒருநபர் என்கிற நிலையிலே இந்த வரலாறு ஆரம்பமாகி, பின்பு கோத்திர நிலையான அளவிற்கு அது மாறினதை நாம் பார்க்கின்றோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யாக்கோபின் குமாரர்களாகிய 12 கோத்திரத்தார் ஆகியோர் மேலெல்லாம் ஆசீர்வாதம் கடந்துவந்தது. பின்பு விசுவாசத்தின் அடிப்படையிலே ஆபிரகாமின் சந்ததியாராக இருக்கின்ற நம்மனைவர்மீதும் இந்த ஆசீர்வாதம் கடந்து வருகிறதாய் இன்று வரை இருக்கின்றது.

- ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யாக்கோபின் 12 குமாரர்களாகிய கோத்திரத்தாருக்கு தேவனே இராஜாவாக இருந்தார்.
- யாக்கோபின் குமாரரில் தேவன் யூதாவை இராஜரீகமான கோத்திரமாக தெரிந்தெடுத்தார். லேவி கோத்திரத்தாரை ஆசாரிய ஊழியத்திற்காக தெரிந்தெடுத்தார்.
- யாக்கோபுக்கு மிகவும் பிரியமான யோசேப்புக்கு பிறந்த எப்பிராயீம் மற்றும் மனாசே ஆகிய இருவரும் யாக்கோபின் இரண்டு குமாரராக கருதப்பட்டு இரண்டு கோத்திரங்களானார்கள் என்று பார்க்கின்றோம்.

## கோத்திரபிதாக்களின் நாட்களில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த ஜாதியினர்:

### 1. <u>கானானியர்</u>

- கானானியர் என்கிற இந்த பெயர் சில நேரங்களிலே கானான் தேசத்தில் வாழ்ந்த அனைவருக்கும் பொதுப்பெயராக இருந்தது என்று வரலாற்றிலே பார்க்க முடிகிறது. எப்படியெனில், கானானிலே வசித்ததினாலே கானானியர் என்றழைக்கப்பட்டார்கள். ஆயினும் பாலஸ்தீனாவிலே குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்தவர்களுக்கே இந்த பெயர் கொடுக்கப்பட்டிருந்தது.
- கி.மு. 3000ம் ஆண்டில் இவர்கள் அரேபியாவின் வடகிழக்கு பாலஸ்தீனாவிற்கு வந்துள்ளனர். அந்நாட்களில் குறிப்பிட்ட கானானிய பட்டணங்கள் கட்டப்பட்டு இருந்தன என்று வரலாறு கூறுகின்றது.
- முதலாவது ‘‘எபுஸ்’’ இதனுடைய மறுபெயர் எருசலேம். இரண்டாவது ‘‘மெகிதோ’’ என்கிற பட்டணம். மூன்றாவது ‘‘பிப்லோஸ்’’ என்கிற பட்டணம். இதனுடைய மறுபெயர் கேபால். நான்காவது ‘‘கேஷர்’’ என்ற பட்டணம். ஐந்தாவது ‘‘அருமாத்’’ என்ற பட்டணம். ஆறாவது ‘‘பெத்சான்’’ என்ற பட்டணம்.
- இவர்களைக் குறித்து அரணிப்பான பட்டணங்களிலே குடியிருந்தவர் என்று இஸ்ரவேல் வேவுகாரர்கள் கூறினதை எண்ணாகமம் 13:28 போன்ற வசனங்களில் வாசித்துப் பார்க்கின்றோம்.
- இஸ்ரவேல் ஜனங்கள் பாலஸ்தீனத்தைப் பிடித்தபடியினாலும், பாலஸ்தீனத்தின் தென்மேற்கு பகுதியில் பெலிஸ்தியர்கள் வாழ்ந்தபடியினாலும், கானானியர் பாலஸ்தீனத்தின் வடகிழக்கேயுள்ள

கடலோரப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டனர் என்றும் பிற்காலங்களிலே இவர்கள் கடலோர தீவுகளிலே குடியேறினார்கள் என்றும் நாம் வரலாற்றின் அடிப்படையிலே தெரிந்துகொள்கின்றோம்.

## <u>பெலிஸ்தியர்கள்</u>

- இவர்கள் இத்தோரியா அல்லது கிரேத்தா தீவிலிருந்து வந்து பாலஸ்தீனாவிலே குடியேறினவர்கள் என்று ஆமோஸ் 9:7ன்படி அறிந்துகொள்கிறோம்.
- கோத்திரப்பிதாக்களுக்கு முன்பே இவர்கள் பாலஸ்தீனாவிலே வாழ்ந்தவர்கள்.
- ஆரம்ப நாட்களிலே ‘‘கேரார்’’ என்பது இவர்களுடைய தலைநகரமாக இருந்திருக்கின்றது. இது வியாபார மையமாக இருந்திருக்கின்றது. இவர்கள் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இவர்கள் விருந்தசேதனம் பண்ணப்பட்டவர்களும் அல்ல.
- இவர்கள் தாவீதின் காலம்வரைக்கும் இரும்புவேலை செய்தவர்கள் என்று வரலாற்றிலேயிருந்து தெரிந்து கொள்கிறோம்.
- பெலிஸ்தியர்களை ஐந்து இராஜாக்கள் ஆண்டு வந்தனர். அவர்களின் தலைநகரம் ‘‘அஸ்தரோத்’’, ‘‘அஸ்கலோன்’’, ‘‘எஸ்ரோன்’’, ‘‘காத்’’, ‘‘காசா’’ போன்றவையாகும்.
- பெலிஸ்தியர்கள் அவ்வப்போது படையெடுத்து இஸ்ரவேலரை ஒடுக்கினார்கள் என்று நாம் வேதத்தில் பார்க்கின்றோம். பெலிஸ்தியரின் கைகளிலிருந்து இஸ்ரவேலை மீட்பதற்காக தேவன் நியாயாதிபதிகளையும், இராஜாக்களையும் ஏற்படுத்திய வரலாற்றைத்தான் நாம் நியாயாதிபதிகள் மற்றும் இராஜாக்கள் புத்தகங்களில் பார்க்கின்றோம்.
- தாவீது மற்றும் சாலொமோன் நாட்களிலே பெலிஸ்தியர் இஸ்ரவேலருக்கு கப்பங்கட்டி வந்தார்கள் என்றும் வரலாற்றிலே அறிகின்றோம். ஆயினும் இந்த பெலிஸ்தியர் முற்றிலும் முறியடிக்கப்படவில்லை. கி.மு.372ல் நீண்டகால முற்றுகைக்கு பின் அலெக்ஸாண்டர், பெலிஸ்தியரின் தலைநகராகிய காசாவை பிடித்தான். இவ்விதமாக பிடித்த பின்பு பெலிஸ்தியர், ஏனைய ஜாதிகளோடு கலந்து வரலாற்றிலே தனித்தன்மையை இழந்துபோயினர். பெலிஸ்தியர் என்கிற தனி ஜாதியினர் இப்பொழுது இல்லை. மற்றவர்களோடு கலந்துவிட்டனர். பெலிஸ்தியரைக் குறித்ததான

அநேக காரியங்களை வேதாகமத்தின் மூலமாக நாம் அறிந்துகொள்கின்றோம்.

## கேள்விகள்:

1. இஸ்ரவேல் வரலாறு எவ்விதமாக ஆரம்பமாகிறது என்பதனையும், அது எவ்விதமாய் உலக வரலாற்றிலே தாக்கங்களை ஏற்படுத்தகூடியதாக இருக்கின்றது என்பதனையும் கூறுக?
2. இஸ்ரவேல் வரலாற்றைக் கற்றுக்கொள்வதினால் நமக்கு கிடைக்கின்ற ஆசீர்வாதங்களை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?
3. இஸ்ரவேல் வரலாற்றை புரிந்துகொள்ளும் வண்ணம் இப்பாடத்தின் மூலமாக நாம் கற்றுக்கொண்ட அடிப்படையான காரியங்கள் என்னென்ன என்பதனைக் குறிப்பிடுக?
4. ஆபிரகாமின் அழைப்பு மற்றும் தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்கள் பற்றிக் கற்றுக்கொண்டவைகளைக் கூறுக?
5. ஆரான் பட்டணத்தைக் குறித்தும், எமோரியர், கானானியர் மற்றும் பெலிஸ்தியர் ஆகியோரைக் குறித்தும் இப்பாடத்தில் கற்றுக்கொண்ட குறிப்புகளை தலைப்புவாரியாக வரிசைப்படுத்திக் கூறுக?